**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.107/2024**
**Prosecution Witness**:9

| Name | திரு.A.சந்திரசேகரன் (PW9 ) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2026 by G.Kiruthiga Bench Clerk Grade III District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:-**

நான் தற்போது கொடுமுடி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.07.2024ம் தேதியன்று நான் சிவகிரி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சிவகிரி காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கே.சந்திரசேகரன் என்பவர் புலன் விசாரணையின் பொருட்டுஎனது பார்வைக்கு வைத்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.162/2024 ச/பி.281, 125(a) BNS வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 31.07.2024 தேதி இரவு 21.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான சிவகிரி – முத்தூர் செல்லும் சாலையில் தெற்குபாளையம், ஸ்ரீபாலமுருகன் பைனான்ஸ் அருகில் சென்று சம்பவ இடத்தை மின்விளக்கு மற்றும் டார்ச் லைட் உதவியுடன் சாட்சிகள் அர்ஜுனன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் முத்துகுமரன், வரதராஜன், சேகர், அர்ஜுனன், ராஜ்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 01.08.2024ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட சாரதாம்பாள் மற்றும் கலாவதி ஆகிய இருவரையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 06.08.2024ம் தேதி காலை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.24 17:07:24 +0530

10.30 மணிக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டு சிவகிரி காவல்நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரி சரவணபவன் என்பவரை நிலையத்தில் வைத்து கைது செய்து திரேக பரிசோதனை செய்து உரிய பிணையின் பேரில் விடுவித்தேன்.

3. அன்றைய தினமே விபத்தின்போது எதிரி சரவணபவன் ஓட்டிவந்த TN 33 AY 8269 Hero Honda Super Splender இருசக்கர வாகனம் மற்றும் விபத்தின் போது சாட்சி சாரதாம்பாள் ஓட்டி சென்ற TN 33 AZ 1758 TVS XL இருசக்கர வாகனம் ஆகியவ்றறை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம்அனுப்பிவைத்தேன். பின்னர் கடந்த 26.08.2024ம் தேதியன்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை வாகன தணிக்கை செய்து சான்று வழங்கிய ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை (கிழக்கு) சேர்ந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சிவகுமார் என்பவரை விசாரணை செய்து வாகனங்களின் தணிக்கை சான்றுகள் பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். TN 33 AY 8269 Hero Honda Super Splender **வாகனத்திற்கு வழங்கிய தணிக்கை சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. TN 33 AZ 1758 TVS XL **வாகனத்திற்கு வழங்கிய தணிக்கை சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே இவ்வழக்கில் காயம்பட்ட சாரதாம்பாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு ஆர்த்தோ சென்டர் மருத்துவனை மருத்துவர் சச்சிதானந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கே.சந்திரசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி சாரதாம்பாளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் அடிப்படையில் 26.08.2024ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 281, 125(a) BNS லிருந்து ச/பி.281, 125(b) BNS ஆக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 26.08.2024ம் தேதி எதிரி சரவணபவன் மீது ச/பி. 281, 125(b) BNS படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.24 17:07:28 +0530

(மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்யும் பொருட்டு அரசு தரப்பில் பிரிவு 330(3) BNSSன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

விபத்து நடந்த சாலையானது கிழமேலாக வந்து வடக்கே செல்லும் சாலை என்றால் சரிதான். கிழமேலாக வந்து வடக்கே திரும்பும் பிரிவில் தான் வேட்டுவபாளையம் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையின் அகலம் சுமார் 60 அடி இருக்குமா என்றால் இருக்கும். சாலையின் மத்தியில் வெள்ளை கோடுகள் இருந்தது என்றால் சரிதான், ஆனால் தெளிவாக இல்லை. வெள்ளைகோடுகளை நான் தயார்செய்த மாதிரி வரைபடத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது மாதிரி வரைபடத்தில் வேட்டுவபாளையம் செல்லும் பிரிவு ரோட்டிற்கு 50 அடி முன்பாக குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அ.சா.2 சாரதாம்பாள் ஓட்டிவந்த TVS வாகனம் யாருக்கு சொந்தமானது என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், அது மூன்றாம் நபருடையது. அ.சா.2 சாரதாம்பாள் ஓட்டிவந்த TVS வானத்திற்கு பதிவு சான்றிதழ் புதுப்பிக்கவில்லை என்றும், அ.சா.2 சாரதாம்பாளுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அ.சா.2 சாரதாம்பாள் எனது விசாரணையில் நான் சைகை காண்பித்து திரும்பியபோது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை செய்த மருத்துவர் விபத்து நடந்தது மாலை 04.00 மணிக்கு என்று அ.சா.1 கூறியதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

3. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் நவலடியான் பர்னிச்சர் கடை உள்ளது என்றால் சரிதான் ஆனால் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை. நவலடியான் பர்னிச்சர் கடையில் சாலையை பார்த்தாற்போல் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று நான் கண்காணிப்பு கோமராவில் பதிவான காட்சிகளை தரவிறக்கம் செய்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.24 17:07:32 +0530

கண்காணிப்பு கேமரா பதிவுகளை தரவிறக்கம் செய்து பார்த்திருந்தால் விபத்து எவ்வாறு நடந்திருக்கும் என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் தான் ராஜா சைக்கிள் கடை மற்றும் ராஜா துணிக்கடை உள்ளது என்றால் சரிதான். எதிரி போக்குவரத்து விதிகளை அனுசரித்து சாலையின் இடதுபுறமாக முத்தூர் செல்லும் சாலையில் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து திரும்பும்போது அ.சா.2 எதிரி ஓட்டிவந்த வாகனத்தை கவனிக்காமல் அதிவேகமாக வந்து எவ்வித சைகையும் காட்டாமல் திரும்பியதால் தான் இந்த விபத்தனாது நடைபெற்றது என்றாலும், இந்த விபத்திற்கு முழுகாரணம் TVS ஓட்டி வந்த அ.சா.2 சாரதாம்பாள் தான் என்றாலும் சரியல்ல.

4. எதிரி வளைவு சாலையில் வண்டியை ஓட்டிவந்ததால் அதிவேகமாக வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், அவர்களிடம் இருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.24 17:07:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.